**உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாயப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணைகள்**

முன்னிலை : திருமதி.ம.பேச்சியம்மாள்,
உதவி இயக்குநர்

இடம் : தூத்துக்குடி

**செயல்முறை ஆணை எண். அ1 / 4004 /2024, நாள். 23 .10.2024.**

பொருள் பணியமைப்பு – வேலைவாயப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்புப் பிரிவு – நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி–IV தேர்வின் வழி இளநிலை உதவியாளர் பதவிக்கான தெரிவுதாரர் பட்டியல் பெறப்பட்டது – திரு.சு.வீரியபெருமாள், இளநிலை உதவியாளர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி – ஒதுக்கீடு செய்யப்பட்டமை – பணி வரன்முறைசெய்து ஆணை பிறப்பித்தல் தொடர்பாக.

பார்வை 1. இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.நிர்2/13013/2023, நாள். 10.10.2023.
2 உதவி இயக்குநர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணைகள் எண் அ1/3892/2023, நாள். 11.10.2023.

---------------

ஆணைகள்:

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி–IVன் மூலமாக வேலைவாய்ப்புத் துறைக்கு திரு.சு.வீரியபெருமாள் அவர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை(1)இல் காணும் இணை இயக்குநர்(வேலைவாய்ப்பு), சென்னை அவர்களின் செயல்முறை ஆணைகளின் வாயிலாக மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடிக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிகப் பணி நியமனம் செய்யப்பட்டார். மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.சு.வீரியபெருமாள் அவர்களுக்கு பார்வை(2)இல் காணும் உதவி இயக்குநர், தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணைகள் வாயிலாக தற்காலிகப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தனியர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தூத்துக்குடியில் 11.10.2023 அன்று பிற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

இவர் தனது ஓராண்டுப் பணிக்காலத்தை 11.10.2024 அன்று முற்பகல் நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து திரு.சு.வீரியபெருமாள், இளநிலை உதவியாளர் அவர்களது பணி, இவர் பணியில் சேர்ந்த நாளான 11.10.2023 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்படுகிறது.

திரு.சு.வீரியபெருமாள், இளநிலை உதவியாளர் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 11.10.2023 பிற்பகல் முதல் தொடர்ச்சியான 3 ஆண்டுகளுக்குள் 2 ஆண்டு காலத்திற்கு (He is placed under probation for two years in the continuous period of three years) நிபந்தனைக்குட்பட்டு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

இச்செயல்முறை ஆணைகளைப் பெற்றமைக்கான ஒப்புகை உடன் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும்.

உதவி இயக்குநர்
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
தூத்துக்குடி

பெறுநர்
திரு.சு.வீரியபெருமாள்,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும்
தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
தூத்துக்குடி

நகல்
1. பணிப்பதிவேடு
2. இருப்புக் கோப்பு-35